செய்தி வெளியீடு எண்:869 நாள்: 16.10.2008

# இந்து சமய அறநிலையத் துறை, சென்னை.

## <u>செய்திக்குறிப்பு</u>

<u>தமிழகத் திருக்கோயில் பணியாளர்கள் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை குறித்து.</u>

தமிழக திருக்கோயில்களில் பணிபுரியும் திருக்கோயில் பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு அளித்த கோரிக்கைகள் குறித்து இன்று 16.10.2008 மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் முன்னிலையில் பணியாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது.

திருக்கோயில் பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு அரசுக்கு 25 கோரிக்கைகள் வைத்திருந்தனர். இக்கோரிக்கைகளில் ஏற்கனவே மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றத்தில்,

- பணியாளர்கள் ஓய்வு பெறும்போது வழங்கப்படும் சிறப்புப் பணிக்கொடைத் தொகை ரூ.1000—லிருந்து ரூ.5000—ஆக உயர்த்திடவும்,
- திருக்கோயில் பணியாளர்கள் சம்பள நிலுவைத் தொகை வழங்க திருக்கோயில் ஆண்டு வருமான வரம்பினை ரூ.40000—லிருந்து ரூ.1,00,000/—ஆக உயர்த்திடவும்,
- பணியிலிருக்கும்போது இறக்க நேரிடும் திருக்கோயில் பணியாளர்களுக்கு குடும்ப நலத் தொகை ரூ.75,000/— லிருந்து 1,00,00/— ஆக உயர்த்திடவும்,
- சீருடை அணியும் பணியாளர்களுக்கு சலவைப்படி மாதம் ரூ.20/—லிருந்து ரூ.30/—ஆக உயர்த்திடவும்,

- நிலை–4 செயல் அலுவலர்கள் பணியிடங்களில் 25 சதவிகிதம் திருக்கோயில் பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கும்,

அறிவித்தார்கள்.

இவற்றில் சலவைப்படி உயர்த்துவது தொடர்பாக ஆணை வழங்கப்பட்டுள்ளது. சம்பள நிலுவைத் தொகை பெற திருக்கோயில் வருமான வரம்பினை ரூ.1 இலட்சமாக உயர்த்துவதற்கும், பணியாளர்கள் குடும்ப நலத் தொகையினை ரூ.1 இலட்சமாக உயர்த்துவதற்கும் 10 நாட்களில் உத்திரவு வழங்கப்படும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

சிறப்புப் பணிக்கொடை ரூ.5000/–ஆக உயர்த்துவது, நிலை–4 செயல் அலுவலர் பணியிடங்களில் திருக்கோயில் பணியாளர்களுக்கு 25 சதவிகிதம் ஒதுக்குவது மற்றும் இதர கோரிக்கைகள் விரைவில் பரிவோடு பரிசீலனை செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

மேலும், திருக்கோயில் பணியாளர்களுக்கு ஆண்டு தோறும் திருவிழா சிறப்புப்பணி பார்த்ததற்காக வழங்கப்படும் சிறப்பூதியத்தை வழக்கமான அளவில் இந்த ஆண்டும் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை செயலர் திரு. க. முத்துசாமி, இ.ஆ.ப. அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை முதன்மைச் செயலர்/ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப. அவர்களும், இந்து சமய அறநிலையத் துறை உயர் அலுவலர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் சங்க கூட்டமைப்பைச் சார்ந்த நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

**********

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9